**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 147/2021**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **முத்துபாண்டியம்மாள்** | Caste | : |
| Father 's Name | : **ஜெயக்கொடி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**
**02.06.2025**
**முதல் விசாரணை**

நான் தற்போது கப்பலூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இரண்டு பேரையும் எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டைச் சார்ந்தவர் ஆவார்கள். ஏற்கனவே எங்களுக்குள் இருந்த இடப்பிரச்சினை சம்பந்தமாக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருந்தது. இந்நிலையில் கடந்த 24.07.2019 அன்று மதியம் 3 மணியளவில் பிரச்சினைக்குரிய இடத்தில் ஆஜர் எதிரிகள் இரண்டு பேரும் குழி தோண்டிக் கொண்டிருந்தார்கள். பிரச்சினைக்குரிய இடத்தில் ஏன் குழி தோண்டிக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்ட போது ஆஜர் எதிரிகள் இரண்டுபேரும் என்னை பார்த்து தேவிடியா அவுசாரி என அசிங்கமாக பேசி மண்வெட்டி மற்றும் கடப்பாறையால் இரண்டு எதிரிகளும் என்னை வலது தோள்பட்டையிலும் வலது கால் முட்டியிலும் அடித்தார்கள். அதனால் எனக்கு அந்த இடத்தில் இரத்தக் காயம் ஏற்பட்டது. எனது கணவர் ஏன் இவ்வாறு மறுபடியும் பிரச்சினை செய்கிறீர்கள் என்று கேட்ட போது எதிரி அழகர்சாமி எனது கணவரை கடப்பாறையால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். அங்கு பக்கத்தில் இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். அங்கு பக்கத்தில் இருந்த ஆட்டோ மூலம் நானும் எனது கணவர் ஜெயக்கொடியும்

திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். நான் வெளியே நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனது கணவரை மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சம்பவம் நடந்த அன்று சம்பவம் பற்றி நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை. இல்லை.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 147/2021**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஜெயக்கொடி** | Caste | : |
| Father 's Name | : **அழகர்சாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**
**02.06.2025**
**முதல் விசாரணை**

நான் தற்போது கப்பலூரில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிசியன பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இரண்டு பேரையும் எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டைச் சார்ந்தவர் ஆவார்கள். ஏற்கனவே எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடப்பிரச்சினை சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்துகொண்டு இருக்கிறது. இந்நிலையில் கடந்த 24.07.2019 அன்று மதியம் 3 மணியளவில் பிரச்சினைக்குரிய இடத்தில் ஆஜர் எதிரிகள் இரண்டுபேரும் குழி தோண்டி கொண்டு இருக்கும் போது எனது மனைவி அ.சா.1 கேட்டதற்கு எனது மனைவியை இரண்டு எதிரிகளும் அசிங்கமாக பேசி மண் வெட்டி மற்றும் கடப்பாறையால் வலது தோள்பட்டையிலும், அழகர்சாமி மண்வெட்டியால் எனதுமனைவியை வலதுதோள்பட்டையிலும் எதிரி செல்வக்கண்ணன் கடப்பாறையால் வலது கால் முட்டியிலும் எனது மனைவியை அடித்துவிட்டார்கள். அதனால் எனது மனைவிக்கு இரத்தக்கட்டு ஏற்பட்டது. அதை நான் கேட்டதற்கு என்னையும் ஆஜர் எதிரிகள் இரண்டுபேரும் சேர்ந்து கடப்பாறையால் தலையில் அடித்துவிட்டார்கள். அதனால் தலையில் எனக்கு காயம் ஏற்பட்டது. எனக்கு இரத்தம் நிறைய வந்தது. அக்கம்பக்கம்

உள்ளவர்கள் விலக்கிவிட்டார்கள். அங்கு உள்ள ஆட்டோ மூலம் நானும் எனது மனைவியும் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். என்னை மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனை அனுப்பி வைத்தார்கள். அங்கு நான் 7 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். எனது மனைவி வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார். சம்பவம் பற்றி எனது மனைவி அ.சா.1 புகார் கொடுத்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 147/2021**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பவித்ரா** | Caste | : |
| Father 's Name | : **ராஜேஷ்கண்ணன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**
**02.06.2025**
**முதல் விசாரணை**

நான் கப்பலூரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் இரண்டு பேரையும் எனக்கு தெரியும். அவர்கள் அ.சா.1,2 ன் பக்கத்து வீட்டைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் இடப்பிரச்சினை சம்பந்தமாக பிரச்சினை இருந்தது. கடந்த 24.07.2019 அன்று மதியம் 3 மணியளவில் பிரச்சினைக்குரிய இடத்தில் எதிரிகள் இரண்டுபேரும் மண்வெட்டி மற்றும் கடப்பாறையால் குழி தோண்டிக் கொண்டிருந்தார்கள். அ.சா.1 பிரச்சினைக்குரிய இடத்தில் எதற்காக குழி தோண்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் இரண்டு பேரும் சேர்ந்து நாங்கள் அவ்வாறு தான் குழி தோண்டுவோம் என சொல்லி அ.சா.1 அசிங்கமாக பேசி அ.சா.1 இரண்டுபேரும் சேர்ந்து மண்வெட்டி கடப்பாறையால் அ.சா.1 ன் தோள்பட்டை மற்றும் வலது கால்முட்டியால் அடித்துவிட்டார்கள். அ.சா.1 ன் வலதுதோள்பட்டையில் மண்வெட்டியால் எதிரி அழகர்சாமி அடித்தார். எதிரி செல்வக்கண்ணன் கடப்பாறையால் அ.சா.1ன் வலது கால் முட்டியில் அடித்தார். அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டது. அப்போது அ.சா.1 ன் கணவர் ஜெயக்கொடி ஏன் இவ்வாறு அடிக்கிறிர்கள் என்று எதிரிகள் கேட்டதற்கு அவ்வாறு தான்

அடிப்போம் உன்னையும் அடிப்போம் என சொல்லி எதிரி அழகர் சாமி அ.சா.2ன் பின்னந்தலையில் கடப்பாறையால் அடித்துவிட்டார். அதனால் அவருக்கு தலையில் இருந்து இரத்தம் நிறைய வந்தது. அதன் பின்பு அங்கு உள்ள ஆட்டோ மூலம் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். அ.சா.2க்கு ஏற்பட்ட காயம் பெரிய காயமாக இருந்ததால் அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சம்பவம் பற்றி முத்துபாண்டியம்மாள் புகார் கொடுத்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை. இல்லை**